# சுடர்

25 காசு

மாத இதழ்

3



15, ஏப்ரல்,
1981

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

# நமது வாசகர்கள்

* மனித பலவீனத்தைப் பயன்படுத்திக் காம உணர்வூட்டி வணிக நோக்கில் பாழடித்து வரும் இழிந்த இதழ்களிடையே உண்மை நிலையைத் துணிவுடன் உணர்த்துவதில் முன் நிற்கும் பொன்னேடாக சுட்டி வளர வாழ்த்துவதுடன் நில்லாது சந்தா ரூ. 3–00 அனுப்பியுள்ளேன்.

**—கவிஞர் கண்ணால் செல்வம், கடலங்குடி.**

* பல்லவன் ஜன்னலில் இடுக்கில் பிரசவம்— மூக்கு மட்டும் நீட்டிக்கொண்டிருந்தது— இழுக்கிறேன்— கண்டக்டருக்குக் காசு கொடுத்துவிட்டு—பிரிக்கிறேன்—ஆஹா—பச்சையாய்—சிறகடித்துப் பறக்கத் துடிக்கும்—ஒரு சின்னக் குருவி—'சுட்டி'! ஆம், படுசுட்டியாய்—இருக்கும் ஐயமில்லை!

**—அவன், திருவல்லிக்கேணி.**

* தன்னைச் சுட்டியும், தன் நாட்டைச் சுட்டியும் விளங்குகிறது இந்தச் சுட்டி.

**—G. பல்லா, தி. நகர்.**

* தேவையானவை பற்றி மேலும் புகுத்தி, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து, செயலை ஆக்கபூர்வமாக ஆக்க எனது பாராட்டுக்கள்.

**—மோகன், பேங்க் ஆப் மஹாராஷ்டிரா.**

## புதிய சுட்டி

இதுவரை தனிச்சுற்றுக்கு மட்டும் வெளிவந்துகொண்டிருந்த சுட்டி, இந்த இதழ் முதல் ''பதிவு பெற்ற பத்திரிகையாக'' அதிக பேர்களை எட்ட வெளியாகிறது. புதிய வாசகர்கள், சுட்டி எல்லா விதத்திலும் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு இதனைத் தொடர்ந்து பெற விரும்பலாம். ஆண்டு சந்தா ரூ. 3 செலுத்தினால் 12 இதழ்கள் அஞ்சலில் வந்து சேரும். பழைய வாசகர்கள் சுட்டியைத் தொடர்ந்து உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். உங்கள் உணர்வுகளில் அவர்களும் பங்கு கொள்ளட்டும்!

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

உலகம்

# போலந்து



போலந்தில் அரசுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே தகராறுகள் தோன்றியுள்ளன. குறிப்பாய்த் தொழிலாளர்களின் தேவையில் அரசு அக்கறையில்லாமல் இருக்கவே அவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள், உடனே வரிந்து கட்டின நம் பத்திரிகைகள். அதை ஒரு புரட்சியாக சித்தரித்தார்கள். அதன் மூலம் அவர்களின் அடித்தள ஆசை வெளிப்பட்டது. அவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு பின்னோக்கிப்பாயும் புரட்சி ஏற்பட்டு மீண்டும் நேரடியான தனியுடைமைச்சமூகம் ஏற்படாதா என்ற கனவு அல்லது இதைக் காட்டி சோஷலிசச் சித்தாந்தம் நடைமுறைச் சாத்தியமற்றதாக நிரூபிக்கலாம் என்பதுதான்.

இந்தத் துர்நாற்றம் நமக்குப் பழக்கமானதே. ஆனால் நமது பார்வை போலந்து மக்களைப் பற்றியது.

போலந்து மக்களே நீங்கள் விட்டுக்கொடுக்காமல் அதே நேரத்தில் எச்சரிக்கையாய்ப் போராடவேண்டும். உங்கள் தேசத்தின் வானத்தில் வல்லூறுகள் வட்டமிடுகின்றன. அவைகளில் ஒன்று உங்களுக்கு ரொட்டி தருவதாகக் கூறலாம். ஆனால் உங்கள் வயிறுகள் கிழிக்கப்படும். மற்றொன்று உங்களுக்குச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க உரிமை பெற்றுத் தருவதாகக் கூறலாம். ஆனால் உங்கள் சுவாசக் குழாய் வெட்டியிருக்கும். தேசத்தை இழந்து சோஷலிசமும், சோஷலிசத்தை இழந்து ஜனநாயகமும் முடியாத காரியம். ஆகவே கவனம்.... நிதானம்! எச்சரிக்கை! போராட்டம்!

—நானக்

இந்தியா :

# ஆங்கிலேயர்களுக்கு முன் இந்தியா



பிரிட்டிஷ்காரன் நுழைவதற்கு முன் இந்தியாவின் நிலை என்ன? சிலர் சொல்வது மாதிரி உலகத்திற்கே முன்னோடியாகவும் இல்லை. அல்லது வேறு சிலர் சொல்வதுமாதிரி திண்ணை தூங்கும் பண்டாரங்களின் கூடாரமாகவும் இல்லை. இந்தியாவுக்குள்ளேயே ஒரு புதிய இந்தியா கருக்கட்டியிருந்தது.

விவசாயத் துறையை ஒட்டிய பட்டறைத் தொழில்கள் வளர்ந்திருந்தன.

குறிப்பாய் பருத்தி, பட்டு நெசவு, கப்பல் கட்டுதல், உற்பத்தியில் புதிய முயற்சிகள், ஓரளவு உழைப்புப் பிரிவினை, அதே மாதிரி கிராமத்தையும் நகரத்தையும் பிரிக்கும் விசேஷ அம்சங்கள், நகரங்களை நோக்கிக் குடியேறிய மரபுவழிப் பாட்டாளி வர்க்கம் முதலிய மேற்கத்திய விஷயங்கள் இங்கும் முளைவிட்டிருந்தன. அதேபோல் வணிகர்கள் அனுபவ ரீதியில் பண்டப்பரிவர்த்தனையின் நுட்பங்களையும் 'மதிப்பு' பற்றியும் அறிந்திருந்தனர். பின்னர் நிறுவப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் தடங்கள் போடப்பட்டிருந்தன.

தத்துவத்துறையில் சார்வாக—சங்கர மரபுகள் ஒன்றுக்கொன்று மோதி உள்ளாழம் அடைந்து வந்தன. இவை எல்லாம் ஒன்றுபட்டு பழைய மேலோட்டைத் தகர்த்து முன்பாய வேண்டிய கட்டாயம் இருந்தும் சக்திகள் பன்முகமாக பிரிந்து கிடந்ததால் ஒன்று சேர்ப்பதற்கான அறிவார்ந்த முயற்சிகள் இல்லை. இக்கட்டத்தில் தான் பிரிட்டன் நுழைந்தது. இந்நிலையை நம் முந்திய தலைமுறைகள் சாதித்திருக்காவிட்டால் அமெரிக்கர் பூர்வகுடியைத் தங்களுக்கு உபயோகமில்லை என்று அழித்த மாதிரிப் பூண்டோடு அல்லவா அழித்திருப்பான் ஆங்கிலேயன்.

—நானக்.

[இன்றைய இந்தியாவில் ஊழலுக்குரிய காரணங்கள் என்ன? சென்ற இதழிலும், இந்த இதழிலும் வருமிதழ்களிலும் இத்தொடர் அதனை விளக்க முற்படும்.]

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

தமிழ்நாடு:

## சரித்திரம் இரக்கமில்லாதது

உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம், அல்லது வரலாம். இந்திய மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கைக்குக் கிடைத்த ஸ்தாபனங்களின் கீழ் ஒன்றுபட்டு ரத்தம் சிந்தியபோது திடீரென்று நாடெங்கும் பிராந்திய வாதங்கள் தலைதூக்கின. மகிமைகள், மகாசபைகள், சமாஜங்கள், பிற்பட்டோர், முற்பட்டோர் நல அமைப்புக்கள்,



தேச விடுதலை பேசிய தலைவர்களின் பிறப்பு பற்றிய ஆராய்ச்சிகள் நடந்தன. அவர்களும் அப்படியே நடந்துகொண்டார்கள். ஏகாதிபத்தியம் குளிர் காய்ந்தது. தேச பக்த மக்கள் மனம் நொந்து ரத்தம் கக்கினார்கள்.

இதோ இப்போதும் கிட்டத்தட்ட அதே சாயலுடன் தமிழகம் 'எங்கும் ஜாதி அமைப்புக்கள் பல்லிளிக்கின்றன. அவைகளின் பின்னால் அரசியல் கட்சிகள் நாக்கைத் தொங்கப்போடுகின்றன. பேரணிகள், போட்டிப் பேரணிகள், பேனர்கள், போஸ்டர்கள் பவனி வருகின்றன. இனிமேல் வெறியர்கள் வெற்றிவிழாத் தொடுக்கலாம். அடிப்படை உரிமையான வேலை வாய்ப்பு கிடைக்காததால் ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞனும், உயர்த்தப்பட்ட இளைஞனும் தங்களுக்குள்ளேயே தாக்கிக்கொண்டு மண்டை உடையலாம். ஓநாய்கள் மோப்பம் பிடிக்கலாம். நிணம் தின்னலாம். ஆனால் சரித்திரம் இரக்கமில்லாதது என்று கற்றுத்தந்தே தீரும். முசோலினி கற்கவில்லையா ?

—நானக்.

## சிறையில் வாழும் அரும்புகள்!

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பெண்கள் தங்களது குழந்தைகளை 6 வயதுவரை சிறையிலேயே தங்களுடன் வைத்திருக்க அனுமதிக்கும் புதியமுறை ஒன்று மேற்கு ஜெர்மனியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரங்க் பர்ட்டிலுள்ள பிருன்ஸ்ஹைம் சிறைச்சாலையில் இத்தகைய புதியமுறையைப் பரிசோதனைக்காக அதிகாரிகள் அமுல்படுத்தியுள்ளனர்.

அண்மையில்'அமுலான இந்த முறையின் வழி தற்போது கிட்டத்தட்ட '20க்கும் மேற்பட்ட குழந்தைகள் சிறைச்சாலையைத் தங்களது வீடாகக் கருதி வாழ்ந்து வருகின்றனர்.



பீட்டர் பெருண் என்ற 5 வயது சிறுவன் சிறைச்சாலையிலிருந்து ஒரு மைல் தொலைவிருக்கும், பாலர் பள்ளிக்குச் சென்றுவிட்டு, பஸ் ஏறி மீண்டும் சிறைச்சாலைக்கே வந்துவிடுவான்.

அவனுடைய தாயார் மோசடி குற்றத்தின்பேரில் 3 ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

அவர் சிறை புகுந்தது முதல் பீட்டர் அம்மாவுடனேயே இருந்து வருகிறான்.

உலகின் இதர எந்த பகுதியிலும் சிறைக்கு அனுப்பப்படும் பெண்களுடன் அவர்களுடைய குழந்தைகள் நிரந்தரமாகத் தங்க அனுமதிக்கப்படுவதில்லை.

—வானம்பாடி

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

புத்தக விமர்சனம்: **இரண்டாவது உலகைத் தேடி...**

எழுதியவர்: சுரேஷ்

ஜனனி வெளியீடு

இச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகளிலேயே குறிப்பிடத்தக்கது 'மைலாய்' என்ற கதைதான். வியட்நாமின் விடுதலைப் போராட்டத்திற்காக நமது தமிழ் எழுத்தாளர் எழுதியிருப்பது பெருமைக்குரிய விஷயம். இது தவிர மற்ற கதைகள் நவீன சம்பிரதாயக் கதைகள். சில கதைகள் ஆர்ப்பாட்டமாகத் தொடங்கி நடுவில் மூச்சுவாங்கி பொசுக்கென்று ஜீவனை விடுகின்றன. வேறு சிலவற்றில் சில இடங்கள்—சில வார்த்தைகள் 'ப்ளாஷ்' அடிக்கின்றன. பிறகு சாதாரணச் சூழ்நிலை. நாம் மேலும் சில 'ப்ளாஷ்'களைத் தேடுகிறோம். இது எழுத்துக்காரரின் 'ஈகோ' வால் வந்த வினை. இந்த வார்த்தைச் சுகங்காட்டலின் முன்னோடி அவரே என்று கூறுவது உண்மையானால் அது பெருமைக்குரியதல்ல. இவைகளைத் தவிர இந்த எழுத்துக்காரர் ஒரு முன்னுரை மனமிரங்கித் தீட்டியுள்ளார். அதில் தேவையில்லாமல் மார்க்சையும் பிறரையும் தன்னுடன் ஒப்பிட்டு நம்மை மிரட்டிப் பார்க்கிறார். பிறகு ஏதோ விமர்சகர்களை இவர் படைப்பைத் தாக்கி பிரபலமாவது மாதிரியும், ஆகவே போவதாகவும் கற்பனை செய்து பாய்ந்து பாய்ந்து தாக்குகிறார். டான்–குவிக்–சாட்டை நாம் கதாபாத்திரமாக மட்டுமே ரசிக்க முடியும். போகட்டும் இவர் கதைகள் வெளிவந்த பத்திரிகைகள் எவை? ஏன் அறிவிக்கவில்லை. முன்னுரையின் நடைகூட இளவேனிலுடையது மாதிரி உளதே!

[நூல் அறிமுகம், விமர்சனம் வேண்டுவோர் 2 பிரதிகள் அனுப்புக]

## சுட்டியாரின் பதில்கள்....

**கையெழுத்துப்பத்திரிகைகள் வளர்ந்துள்ளனவா?**
—பெ. இரத்தினம், நாமக்கல்

பம்மலில் பல கையெழுத்துப் பத்திரிகைகள் ஒன்றுகூடி வரும் 'மே'யில் மாநாடு நடத்தவிருக்கின்றன.

**எழுத்துரிமைக்காகச் சிறை செல்லத் தயாரா?**
—செல்வராஜ், வேளச்சேரி.

நமக்கு அது அவசியமிராது. சிறை செல்வது இன்று ஒரு விளம்பரம்! ஸ்டண்ட்! சட்டத்திலேயே இன்னும் நிறைய வசதிகள் மறைந்திருக்கின்றன.

**ரஜினிகாந்தின் மார்க்கட் நெருடுமா?**
—ஆனந்த், போத்தனூர்

நமக்கு நிறைய வேலையிருக்கிறது. ப்ளீஸ்... அடுத்தவர்

**விமானக்கடத்தல் ஒரு பொழுது போக்காக மாறி வருவதைக் கவனித்தீர்களா?**
—மல்லிகா, சென்னை–94.

சர்வதேச தொத்துநோய்; வன்முறை 'விண்'வரை வளர்ந்திருக்கிறது.

**புதுக்கவிதை புதுசா?**
—பெருமாள், மம்சாபுரம்.

திருக்குறள் கூட அந்தக்காலத்தில் ஒரு புதுக்கவிதையாகத்தான் எதிர்க்கப்பட்டிருக்கிறது.

**"இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" — இன்று சரியா?**
—பாலசுப்பிரமணியம், மயிலை.

இட்ட பெரியோர், இன்று இடாதாரின்றி இழிகுலத்தில் உள்ளார்கள் என்பது சரி.

**காதல் தற்கொலைகள் இளைஞரிடையே மிகுந்து வருகின்றனவே?**

தன்னம்பிக்கை தராக் கல்வி! துருப்பிடித்த சமுதாய அமைப்பு! உணர்ச்சிப்பூர்வமான அணுகுதல்!

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

சென்னை

## சென்ட்ரல் அருகே ஒரு குட்டி வீராணம்

இன்னும் நமது சராசரி வருமானம் ரூ. 20க்கும் கீழே இருக்கின்றது. இந்த அழகில் அரசு பொதுத்துறை நிர்வாகங்கள் ஒரு குபேர நாட்டில் ஆட்சி நடத்துவதாக நினைத்துக்கொண்டு கண்முடித்தனமாக பண்டங்களை வீணடித்து வருகின்றன.

சென்னை சென்ட்ரல் நிலையத்திற்குப் பக்கமாக, பெரியார் நெடுஞ்சாலையில் கூவத்தின் பழைய பாலம் இருக்கிறது. அந்தச்சாக்கடையின் இருபுறங்களிலும் அஸ்திவாரத்திற்குப் பயன்படுத்தும் (Pile foundation) காங்கிரீட் தூண்கள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தாமல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் விலையென்ன தெரியுமா? ஒரு காங்கிரீட் தூணின் விலை ஏறத்தாழ ரூ 6000/- இந்த விலையில் நூற்றுக்கணக்கான தூண்கள் மக்கி மடிந்துகொண்டிருக்கின்றன. அவற்றில் பல, நுனி இரும்புப்பகுதி துருப்பிடித்து நாசமாயிருக்கின்றன; பல வெடித்துப் போய்விட்டன. இனி அவை வேலைக்கு உதவுமா என்பது சந்தேகம்தான். பொதுப்பணித்துறையும், அரசாங்கமும் காட்டிய அஜாக்கிரதையால் ஏற்பட்டிருக்கிறது இந்த இமாலயப் பாழ்.

ஏற்கனவே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வீராணம் குழாய்கள் வீணான குழாய்களாக நகரத்தின் ஓரங்களில் அழிந்துகொண்டிருப்பது கண்ணை உறுத்திக்கொண்டிருக்கிறது.

நம் கண்ணெதிரிலேயே நம் வரிப்பணம் இத்தகைய 'வீராண'ங்களால் கொடூரமாக வீணடிக்கப்படுவதை இனியும் சகிக்க முடியாது.

—சுட்டிபாரதி



## நூறாண்டுகள் வாழவைக்கும் பொருள்

* இதனை ஒரு சிறு அளவு உண்டால் ஒரு பெரிய கோழி முட்டை கொடுக்கும் கலோரி பலனுக்கு ஒப்பாகும்.
* பாலுடன் கலந்து இரவு தினமும் இதை உட்கொண்டால் தூக்கமின்மையைத் துரத்தியடிக்கலாம்.
* நூறாண்டுகள் வாழ வழிவகுக்கும் ஒரு பொருள் இது. 100 வயதிற்கு மேல் வாழும் 200 பேரைப் பேட்டி கண்டதில் அவர்கள் அனைவரும் தினமும் இதனை உண்பதாகத் தெரிகிறது.
* ஆறாத சீழ்பிடித்த காயங்களை, தீப்புண்களை, இது குணமாக்கும். பெரிய காயங்கள் ஏற்பட்ட இடத்தில் தடவினால் தழும்பு வராமல் தடை செய்யும்.
* இதயத்திற்கு வலிமை அளிக்கும் ஒரே பொருள் இது. பல மற்ற இதயம், இரத்த நாளங்கள் இவற்றைச் சரிப்படுத்தும்.
* நரம்புத்தளர்ச்சியை அகற்றி, உடலுக்கு அழகு, பொலிவு, நல்ல பார்வை இதனால் கிடைக்கிறது.
* கண்வலி, காதுவலி இவற்றை அகற்ற சிறந்த மருந்துப் பொருள் இது.
* காசநோய்காரர்களுக்கு இதனைக் கொடுத்ததில் அவர்கள் இருமல் குறைந்ததாகவும், எடை அதிகரித்ததாகவும் தெரிகிறது.
* பசியில்லாதவர்கள், ஜீரண உறுப்புக்கள் சரியில்லாதவர்கள் இதனை உண்டால் வயிற்றுப்புண், குமட்டல், வயிற்றுவலி இவை குறையும்.

இது அதிசயப் பொருளில்லை. நம்மால் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய "தேன்" தான். ஆனால் தேன் சுத்தமான தேனாக இருக்கவேண்டியது மிக அவசியம்.

—பூச்செண்டு

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

# பிச்சைக்காரர்கள்: இந்நாட்டின் மன்னர்கள்


இந்தியாவில் ஒரு நாளைக்கு பிச்சைக்காரர்களுக்காக
ரொக்கமாகவும், உணவுப்பொருள்களாகவும் செலவு செய்
யப்படும் தொகை ஒரு கோடி ரூபாய். மொத்த பிச்சைக்காரர்
கள் எண்ணிக்கை 55,00,000. அதில் 14 வயதுக்குட்பட்ட
வர்கள் 1,15,500. 50 வயதைக் கடந்தவர்கள் 12,00,000
பேர். 1,50,000 பேர் குஷ்டரோகிகள். 8,00,000 பேர்
குருடர்கள். காதுகேளாதவர்களின் எண்ணிக்கை 3,00,000.
மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் 1,00,000.

EUNEUCH எனப்படும் அலிகளின் எண்ணிக்கை
85,000. சாராசரி ஒரு இந்தியப் பிச்சைக்காரரின் தினசரி
வருமானம் இரண்டு ரூபாய். 75 பைசா ரொக்கமாகவும்,
1-25 ரூபாய் உணவுப்பொருள்களாக கிடைக்கப்பெறும்
இவர்களின் தினசரி வருமானம் இடத்துக்கு இடம் மாறுபடு
கிறது. சென்னை, கல்கத்தா பிச்சைக்காரரின் ஒரு
நாளைய வருமானம் எட்டு ரூபாய். உடல் ஊனம் கொண்ட
வர்கள் இருபது ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள்- இந்திய
பிச்சைக்காரர்களில் 51.8 சதவிகிதத்தினர் பல்வேறு வியாதி
யின் காரணமாகப் பிச்சையெடுக்கின்றனர். கை,கால் இழந்து
இந்த நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் 13.9 சதவிகிதத்தினர்.
பெற்றோர்கள் இல்லாத அனாதைகள் 6.5 சதவிகிதம். கண
வனை இழந்த கைம்பெண்கள் மூன்று சதவிகிதத்தினர்.
குடியினால் எல்லாவற்றையும் இழந்து பிச்சையெடுப்பவர்கள்
இரண்டு சதவிகிதம். வேலை இழந்தவர்கள், வேலை கிடைக்
காததால் இப்படி மாறியவர்கள் 7.2 சதவிகிதம். இது
78-ஆம் வருட கணக்கு.

ஜப்பானிய குழந்தைகள் பலரின் ஆசைகள் நிறை
வேறும் வகையிலும் ப்பியூஜிட்டாவின் கனவு நனவாகும்
வகையிலும் இவர்கள் நல்வாழ்வு பெறும் நாள் எவ்வளவு
தூரத்தில் உள்ளது?

—பார்கான்.

இந்தியாவை வியப்புடன் தரிசித்த சகோதரிப் பியு ஜிட்டாவிடம் மேலும் சில கேள்விகள்:




கேள்வி: இந்தியா வந்தவுடன் தங்களுக்கு ஏற்பட்ட வியப்பான அனுபவம் என்ன?

பதில்: பம்பாயில் இறங்கியவுடன், ஜுஹு கடற்கரையை ஒட்டிய ஒரு பங்களாவிலே விடியற்காலை கண் விழித்தேன். நூற்றுக்கணக்கான பேர்கள் கடலோரம் அமர்ந்து சுறுசுறுப்பாக ஏதோ செய்வது என்னைக் கவர்ந்தது. இவ்வளவு காலையில் இவ்வளவு சுறுசுறுப்பாக ஜப்பானில் யாரையும் பார்க்க முடியாது. விரைவாக கீழே இறங்கிப்போய், கூட்டமாக வேலை செய்யும் ஆட்களைக் காண ஆவலுடன் சென்றேன். அருகில் சென்றபோது திடுக்கிட்டேன். அருவருப்புடனும் ஏமாற்றத்துடனும் திரும்பினேன். ஆம்! அங்கு அவர்கள் தங்கள் காலைக் கடன்களைக் கூட்டமாகக் கழித்துக் கொண்டிருந்தனர். இயற்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட இடமில்லாத மனிதர்கள் நகரத்திலும் இருப்பது என்னைத் திகைக்க வைத்தது.

கே: பள்ளிக்கூடக் குழந்தைகளுடன் தொடர்புடையவர் என்பதால் ஆரம்பக் கல்வி பற்றிச் சொல்லுங்களேன்?

ப: எங்கள் நாட்டில் 100% படித்தவர்கள். 6 முதல் 16 வயதுவரை கட்டாயக் கல்வி. 6 வயதில், தனியார் நடத்தும் KG வகுப்பில் இடம் பிடிக்க நிறைய போட்டி உண்டு. அதற்கான தேர்வுகளைச் சந்திக்க 2 வயது குழந்தைகள் கூட பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பாடுபடுவதைப் பார்க்கலாம். மொத்தத்தில் எங்கள் குழந்தைகளுக்குப் படிப்புச் சுமை மிக அதிகம். ஆண்டுக்கு 3 முறை தேர்வு. பரபரப்பும், பாடச் சுமையும் தாங்க முடியாமல் தொடக்கப்பள்ளி பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதை நம்புவீர்களா?

பேட்டி: எழில் நிலா.

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

# கையொப்பம்



"கல்லாத பேர்களே மிக நல்லவர்கள்." ஆம்! கையெழுத்துக்குக் கட்டைவிரலை மையில் புரட்டும் தற்குறிகள் எவ்வளவோ தேவலை. ஏனென்றால் கற்றவர்கள் என்று பெரிய பட்டங்களை நெற்றியில் கட்டித்திரியும் கல்விமான்கள் இன்னமும் எப்படி கையெழுத்துப் போடுகிறார்கள் என்பதைச் சற்று உற்றுநோக்க வேண்டுகிறேன்.

ஆங்கிலேயனுக்குத் தெரிய வேண்டுமே என்பதற்காக அன்று எல்லோரும் அவன் முன் அவன் மொழியில் கையெழுத்துப் போட்டோம். இப்போது என்ன அவசியம் அதே ஆங்கிலத்தில் போட? அவரவர்களுக்குத் தாய் மொழியே கிடையாதா?

உலகிலேயே அந்நிய மொழியில் இன்னமும் கையெழுத்துப் போடுபவன் இந்தியன்தான். அதில் தமிழ் நாட்டில் தான் ஆங்கில மோகமும் வெறியும் அதிகம்.

எனது நண்பர் ஒருவர் ஒரு கிழக்காசிய நாட்டிற்குச் சென்றிருந்தபோது முக்கிய பத்திரமொன்றில் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டிருக்கிறார். பக்கத்தில் இருந்த அந்நாட்டு நண்பர், 'பாவம் உங்கள் மொழி எழுத்து வளம் இல்லாத மொழி போலிருக்கிறது' என்று அனுதாபப்பட்டிருக்கிறார். தனது ஆங்கிலக் கையெழுத்தால், தன் மொழிக்கு ஏற்பட்ட அவலத்தை உணர்ந்த நண்பர் அன்று முதல் தமிழில் கையெழுத்திட முடிவு செய்தது மட்டுமன்றி மற்றவர்களையும் அப்படியே போடத்தூண்டி வருகிறார்.

பிரஞ்சு மொழியில் கையெழுத்திடும் ஆங்கிலேயனையோ ஆங்கில மொழியில் கையெழுத்திடும் ஜப்பானியனையோ காண முடியாது. கையெழுத்து என்பது வெறும் குறியீடு தான்; அங்கே மொழி தேவையில்லை என்று கெட்டிக்காரத் தனமாக உங்களைப் போலி கௌரவத்திற்காக சமாதானம் செய்து கொள்ளாதீர்கள்.

—சுட்டி பாரதி.



## உங்களுக்கு உழைக்க எங்களுக்கு உத்தரவிடுங்கள்

மேற்கண்ட தேர்தல் வாசகம் எவ்வளவு பெரிய மோசடி என்பது இந்தப் பட்டியலைப் பார்த்தால் வெளிச்சமாகும். மக்கள் வரிப்பணத்திலிருந்து ஓர் அமைச்சருக்கு மாதம் ரூ. 60,350 செலவாகிறது. நமக்கு ஆந்திர பிரதேச அமைச்சரின் செலவுக் கணக்கு கிடைத்துள்ளது. இது நம் தமிழக அமைச்சர்களுக்கும் பொருந்தும் :—

| | | |
|---|---|---|
| சம்பளம், இதர போக்குவரத்துப் படிகள் | ரூ. | 4000 |
| வீட்டு வாடகை, மின்சாரம், குடிநீர் | ரூ. | 4000 |
| 7 பியூன்கள் ஒரு டிரைவர் | ரூ. | 4000 |
| 3 இலவச தொலைபேசிகள் | ரூ. | 4000 |
| 3 இலட்சம் பெறுமான பர்னிச்சர்களின் வட்டி | ரூ. | 4500 |
| 70 ஆயிரம் பெறுமான காருக்கு 18% வங்கிவட்டி | ரூ. | 1050 |
| ஒரு கெசட்டட் அதிகாரி (செயலர்) | ரூ. | 2000 |
| இரண்டு உதவியாளர்கள் | ரூ. | 3000 |
| தினப்படி, போக்குவரத்துபடி, பியூன்களுக்கு | ரூ. | 1000 |
| பாதுகாவலர் (பயண காலத்தில்) | ரூ. | 1600 |
| வீட்டைக் காக்கும் 4 பாதுகாவலர்கள் | ரூ. | 2800 |
| 90 நாள் சுற்றுப் பயணத்தில், பின்னால் வரும் 10 கார்களுக்குச் செலவு | ரூ. | 20,000 |
| நகரத்தில் அமைச்சர் விழாவில் கலந்துகொள்ள | ரூ. | 1,000 |
| இதர செலவுகள் | ரூ. | 7,400 |
| மொத்தம் | ரூ. | 60,350 |

நன்றி : நிஜங்கள், மார்ச், 81 இதழ்.

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

## விபச்சாரம் ஓர் ஆய்வு

விபச்சாரம் உலகளவில் நிலவிவரும் ஒரு சமூக நோய். ஒருபுறம் அறியாமையால் விபச்சாரத்தில் விழுந்த மனிதன் இன்று அறிவுப்பூர்வமாக வலியச் சென்று இதனைப் பற்றி வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். மறுபுறம் செக்ஸ், பணம்ஆகிய இருபெரும் சமுதாயக் கவர்ச்சிகளை உள்ளடக்கி இருப்பதால் தொழில்ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகள் இதைத் தடுப்பதில் தீவிர ஈடுபாடு காட்டுகின்றன.



மக்களை மாக்களின் நிலைக்குத் தாழ்த்தும் இதனை அழிக்கும் முயற்சியின் முதல்படியாக ஐக்கிய நாடுகள் சபை ஓர் ஆய்வு நடத்தியது. அதன் மூலம் மத்திய கிழக்கு, தூரக் கிழக்கு நாடுகளில் விபச்சாரம் ஒரு வாழ்க்கை முறையாகக் கருதப்பட்டமைக்கு அங்கு தொன்றுதொட்டு நிலவி வந்த பெண்ணடிமைச் சமுதாய அமைப்பே காரணம்; எல்லா ஆசிய நாடுகளிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளே இதன் வளர்ச்சிக்கு மூலகாரணம்; 1960ஆம் ஆண்டுக்கு முன்பே இந்தியா, ஜப்பான், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் விபச்சாரத்தை அழிக்கவோ தடுக்கவோ சட்டங்கள் இயற்றப்பட்டுவிட்டன என்று புலனாயிற்று.

வறுமை, ஆடம்பரத்தில் நாட்டம், மனநோய் ஆகியவைகளே விபச்சாரத்தைத் தோற்றுவிக்கின்றன. இதில் மனநோயால் விபச்சாரத்தில் ஈடுபடுவது மிகவும் குறைவு. ரஷ்யாவிலும் சீனாவிலும்தான் இன்று குறிப்பிடத்தக்க வகையில் இது அழிக்கப்பட்டுள்ளது. ரஷ்யப் புரட்சிக்குப்பின் விபச்சாரிகளை அன்றி விபச்சாரத்தை அகற்றுவதிலேயே அரசு அதிக கவனம் செலுத்தியது. ரஷ்ய சமூகத்தின் கலாச்சார அமைப்பை மாற்றியமை இந்த சாதனைக்கு ஒரு மூலகாரணமாகும். சீனாவில் 1949ஆம் ஆண்டு ஏற்பட்ட பொதுவுடமை அரசு விபச்சாரத்தை அடியோடு அழித்தது. வறுமை அகற்றப்பட்ட சோஷலிச சமுதாயத்தில் விபச்சாரிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பது எளிது என்று இந்த அரசு புலப்படுத்தியது. ஜப்பானில் 1946-48 ஆண்டுகளில் விபச்சாரம் அழிக்கப்பட்டது. விபச்சார விடுதிகளே விபச்சாரிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் அலுவலகங்களாக மாற்றப்பட்டன, பெண்களுக்கு நியாயமான சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் அளிப்பதன் மூலம் விபச்சாரக் கொடுமையினின்று இந்த நாடுகள் தமது பெண்களைப் பாதுகாக்கின்றன.

இந்தியாவில் இன்னும் சில இடங்களில் அனுமதிக்கப்பட்ட விபச்சாரம் நிலவுகிறது, இந்திய விபச்சாரிகளில் 66.5 சதவிகிதத்தினர் வறுமை நிறைந்த கிராமப்பகுதிகளிலிருந்து வந்தவர்களே!

**—நிலா.**

## கண்ணிழந்த பெண்மணியின் ஓவியங்கள்

இவரது வண்ணக்கலவைகள், எண்ணற்றோரின் எண்ணங்களைக் கவர்ந்து இழுக்கும் காந்தமாய் பின்லாந்தில் தேசிய அளவில் காட்சிக்கு வைக்கப்பட்டன. புகழ்ச்சிகள், பாராட்டுரைகள், கைத்தட்டல்கள்! ஆனால் தனது ஓவியங்களைத் தானே பார்த்துக்கொள்ள முடியா சோகம்!

சர்க்காபாஜி என்ற அந்தப் பின்லாந்து நாட்டுப் பெண்மணிக்கு நான்கு வயதில் ஒருநாள் கண் ஒளி மங்கிவிட்டது. விடிந்ததும் தமக்குக் கண் பார்வை தெரியும் என நம்பும் விளையாட்டுப் பருவம். ஆனால் அவளுக்கு ராத்திரிகள் விடியவே இல்லை; மனமும் இருண்டு போனது.

ஆயினும் மனதைத் தேற்றிக்கொண்டு மணலைக் கொண்டு ஓவியம் தீட்டும் முயற்சியில் ஈடுபட்டாள்.



முதலில் வர்ணங்களை எப்படிக் கண்டுபிடிப்பது? தொட்டுத் தொட்டுப் பார்த்து, தம்மையே வர்ணங்களுடன் அவர் பழக்கப்படுத்திக்கொண்டார்.

நீலம் குளுமையாக இருக்கும். சிவப்பு வெதுவெதுப்பாக இருக்கும் இப்படியே நிறங்களில் குணங்களை நுட்பமாக உணர்ந்து, நுகர்ந்து புரிந்துகொண்டார் சர்கா.

அவரது ஓவியத்திற்குத் தேவை ஒரு பலகை, பசை, மணல் துகள்கள் மட்டுமே. தற்போது 35 வயதுள்ள சர்க்காவிற்கு இரண்டு பெண் குழந்தைகள், அன்பான கணவர்.

தனது இளையமகள் உசாவுக்கும் கண்பார்வை இழக்கும் அபாயம் என அறிந்தபோது சர்காவை மீண்டும் புதிய சோகம் கவ்விக்கொண்டது. எனினும் துரிதமாக முயன்றால் உசாவை அந்தப்பலியிலிருந்து தப்புவிக்கமுடியும். —அக்கினி

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

*மசாலா பத்திரிகைகள் :*




58 இலட்சம் வாசகர்களைக் கொண்டு இராட்ஷசத்தனமாக விற்பனையாகும்(வாரம் 5,80,000 பிரதிகள்) குமுதத்திற்குத் தமிழ் நாட்டு மக்களின் ரசனையைப் பாதித்ததில் மிகப்பெரும் பங்குண்டு.

குமுதம் (ஒரு காலத்தில்) கௌரவமாக, குடும்பங்களில் படிக்க முடியாத செக்ஸ் பத்திரிகையாகக் கருதப்பட்டது. இதைப் படித்ததற்காக தண்டனை பெற்ற பள்ளி மாணவர்கள் உண்டு. காலப்போக்கில் செக்ஸை ஜனரஞ்சகப்படுத்தி அதுவே வியாபாரப் பத்திரிகைகளின் பிராணவாயுவாக மாற்றச் செய்த பெருமை குமுதத்தைச் சாரும். இன்றைய மசாலா பத்திரிகைகளின் எல்லாவிதமான கீழ்த்தரமான தந்திரங்களுக்கும் ராஜகுரு குமுதம்.

இந்த சமுதாயத்தின் மேல் தாங்க முடியா அக்கறையுடன் ஒரு நியாயவானைப் போல பாசாங்கு செய்யும் தலையங்கங்கள்!

அர்ச்சுனனுக்கு, அம்பை எடுத்தவுடன் குருவியின் கண் தான் தெரியும். குமுதம் அண்ணாமலைக்கும், பார்த்தசாரதிக்கும் தக்ஷிணைத்தவிர வேறெதிலும் குறியில்லை.

பிரபல நடிகையின் ஆபாச படம் வரும் இதழில் பிரார்த்தனை கிளப்பும் வரும். தூக்கு மரத்து நிழலில் பாலனின் இலட்சியத்திற்குப் போராடிய சிறை அனுபவங்கள் வரும் பக்கங்களுக்குக் கொஞ்சம் தள்ளி ஜாக்கெட் போடாத நடிகையின் அனுபவங்களும் வரும். சங்கராச்சாரியாரின் பொன்மொழிகள் ஒரு புறம்; நக்ஸலைட்டைப் பற்றி ஜெயகாந்தனின் துணிகரமான அனுதாபம் ஒரு புறம். இப்படியே எல்லாத் தரப்பிற்கும் கால் நூற்றாண்டாக எலும்புத் துண்டுகளை வீசிவரும் இந்த முதலாளி, பக்கா முதலாளிக்கு ஒரு கச்சிதமான உதாரணம்.



உள் அட்டை விளம்பரத்திற்குமட்டும் வாரம் ரூ. 15,000 கராராக, முன்பணமாக வசூலிக்கும் குமுதம், விளம்பரத்தால் வாரம் ரூ. 64,000க்குக் குறையாமல் சம்பாதிக்கிறது. ஒரு பிரதிகூட விற்பனையாகவில்லையென்றாலும் ஓர் இதழிற்கு 10 காசு லாபம் வரவேண்டும். எனினும் நேற்று மலர்ந்த 'தேவி' இதழைவிட ஓவியர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் குறைவான சன்மானம் தருகிறது. பட்டாம்பூச்சியின் சுதந்திரமான கீதத்தை ஒலி பரப்பிய குமுதம் நிர்வாகத்தில் வேலை செய்பவர்கள் பரிதாபத்திற்குரிய அடிமைகளே.


விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரைத்தவிர பெரும்பாலோர் தற்காலிக வேலையாட்களே. ஆசியாவிலேயே அதிகம் விற்பனையாகும் இந்த பத்திரிகைக்குத் தொழிற்சங்க அமைப்பு முளைத்துவிடாமல் கவனமாகக்காத்து வருகிறார்கள்.

குமுதத்தின் வாசகர்களைவிட, அதிகமான விசிறிகளையுடைய எழுத்தாளர் சுஜாதாவின் தொடர்கதையை, யாரோ சிலருக்குப் பயந்து நட்டநடுவில் வெட்டிக்கொண்ட இமாலய கோழைத்தனம் பத்திரிகையுலக வரலாறு காணாததாகும்.

எங்கும், எப்போதும் பொதுமக்களை, கூட்டங்களை, நேரடி விமர்சனங்களைச் சந்திக்க இதற்கு வலுவிருந்ததில்லை. அலுவலகத்திற்குப் போர்டு கிடையாது. இரும்புத்திரை போட்ட ராணுவத்தனமான அச்சுக்கூடம். தன்னுடைய உள் விவகாரங்களை இருட்டில் மறைத்துக்கொண்டு, மற்றவர்களுடைய இரகசியங்களை மட்டும் வெளிச்சம் போட்டு கிசுகிசுத்துத் தன் பையை நிரப்பிக்கொள்ளும் கோடீஸ்வரனை இந்த எழுத்து வேசி தன்னைப்பற்றி (அரசு பதில், 1-1-81 இதழ் பக்கம் 94) தானே சாக்கடையைவிட மோசமாக ஒப்புக்கொண்டிருப்பது மிகப் பொருத்தம். —எழில்

*அடுத்து தினமணி கதிர்*

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010




## திருவள்ளுவர் இன்றிருந்தால் இப்படி எழுதியிருப்பார் :

புகையும் அனல்கவ்வும் புன்தொழிலார் வாழ்க்கை
வகையின்றி வாழ்ந்து கெடும். (1)

கொன்று பிணமாக்கும் கூற்றின் கொடிதாகும்
புன்தொழிற்கு அன்னை புகை. (2)

புகைபோல ஊதுவார் தம்முயிரை நாளும்
நகைபோல விட்டார் நலிந்து (3)

பெருமையென் றெண்ணிப் புகைப்பார்தம் யாக்கை
சிறுமை அடையுமோர் கூடு (4)

தேராச் சினஞ்சேர்க்கும்; தெளிவாக ஆண்மைக்கும்
மாருப் பகையாம் புகை (5)

நெஞ்சம்வாய் நீள்கையோடு எய்தும் இனம் பார்வை
அஞ்சும் கெடுக்கும் அது (6)

ஈமப் புகைக்குடியில் இன்பம் விழைந்திடுவார்
தாமே உலகின் தடை (7)

பழக்கம் எனும் நோய்க்(கு) இரையாய்க் கழிவர்
இழிக்கும் புகைமருந்து இட்டு (8)

புகையும் தழையும் பொடியும் உவப்பார்
தொகையாக வீழ்வர் தொடர்ந்து (9)

கள்ளும் புலாலும் கடும்புகையும் சூதாட்டும்
எள்ளுதல் சான்றோர் இயல்பு (10)

—சுட்டி பாரதி



## காதில் பட்டது



அண்ணாநகர். மின்சார கட்டணம் கட்ட நீண்ட க்யூவில் நின்றுகொண்டிருக்கிறேன். எனக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கும் பெரியவர் ஏதோ அரசு அலுவலராக இருந்து ஓய்வுபெற்றவராயிருப்பார் போலிருக்கிறது.

அவரைப் போன்ற தோற்றமுடைய இன்னொருவரிடம் கேட்கிறார்:

''என்ன சார் இது. 'நடப்பு பாக்கி', 'முன் பாக்கி' என்று இரண்டு பாக்கிகள் போட்டிருக்கிறார்கள். நான் என்னமோ மாதம் தவறாமல் அவர்கள் குறிப்பிடும் கடைசி தேதிக்குமுன் 'எலக்ட்ரிக் பில்' கட்டிக்கொண்டிருக்கிறேன். இது எப்படி இரண்டு விதமான பாக்கிகள் என்று தெரியவில்லை. அப்படியே பாக்கி இருந்தாலும் ஒரேதாக 'முன் பாக்கி' என்று போட வேண்டியது தானே! அதில் என்ன இரண்டு குழப்பங்கள்!''

பின்னால் நிற்பவர்,

''நானும் தான் சார் மாதம் தவறாமல் பணம் கட்டி விடுகிறேன். இரண்டு பாக்கிகள் மட்டுமல்லாமல் 'காலதாமதக் கட்டணம்' என்று வேறே தவறாமல் ஒருதொகை போடுகிறார்கள். இதையெல்லாம் இங்கே கேட்டால், அந்த ஆபீசிலே கேளு என்று ஒரு ஆபீசைச் சொல்லவேண்டியது. அங்கே கேட்டால் வேறு ஒரு இடத்தைக் காட்டவேண்டியது. யாரும் சரியான விளக்கம் சொல்வதில்லை.''

''எனக்கு முன்பு ஒரு முறை தவறாக கணக்கிட்டுக் கூடுதலான தொகை போட்டு அனுப்பினார்கள். கேட்டபோது, முதலில் பணத்தைக் கட்டிவிடுங்கள், பிறகு ''ரெவின்யூ யூனிட்டில்'' போய் கேட்டுக் கொள்ளுங்கள் என்றார்கள். பணத்தைக் கட்டினால் அது யானை வாயில் போன கரும்புதான். அதை 'ரெபர்' பண்ணி ஒரு வேளை ''ரிடர்ன்'' வாங்குவதாக வைத்துக் கொண்டாலும், அதற்கு ஆகும் செலவுக்கும், சிரமத்திற்கும் இந்தத்தொகையே தண்டம் தொலையட்டும் என்றிருக்கலாம். ஆயிரக்கணக்கானவர்களை 'எம்ப்ளாய்' பண்ணி 'டிபார்ட்மெண்ட்' நடக்கிறது சார். இந்தப் பட்டியல் எவ்வளவோ தெளிவாகவும் கரெக்டாகவும் போடலாம், யார் கேட்பது. இதற்கெல்லாம்...''

நான் பணம் கட்டிவிட்டேன். நகர்கிறேன். அதுவரை காதில் பட்டது.

—சுயராஜ்.

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

## விந்தை மனிதன் க்ராய்சே

**குற்றவியலில் ஞானதிருஷ்டியுள்ள 'சைக்கிக்குகள்' (Psychics) பங்கேற்கும் நாட்கள் வந்துவிட்டனவா ?**

ஹாலந்து நாட்டினரான க்ராய்சேவின் ஞான திருஷ்டி போலீசாருக்குப் பல வகைகளில் துணை புரிந்திருக்கிறது. க்ராய்சே காணுமல் போனவரின் ஆடை அல்லது மற்ற பொருள்களை ஸ்பரிசித்தே அவர் இப்போது எங்குள்ளார் என்பதைக் கூறுகிருர்.

இத்தகைய நிகழ்ச்சி ஒன்று ஹாலந்து போலீஸ் பத்திரிகையில் காணப்படுகிறது. 1961-ம் ஆண்டு ஆகஸ்டு 8-ம் தேதி ஜுரியன் என்ற ஏழுவயது டச்சு சிறுவன் தன் வீட்டிலிருந்து காணுமல் போய்விட்டான். இவனைக் கண்டுபிடிப்பதற்காக போலீசால் நாடப்பட்ட க்ராய்சே, சிறுவனுடைய பெயர், மற்ற விவரங்கள் சொல்லப்படாமலேயே, தன் மனத் திரையில் அவன் நீரும், செடி கொடிகளும் மண் மேடுகளும், ஆழ்ந்த ஓர் இடத்தில் மூழ்கி இறப்பதைக்கண்டார். அவர் சிறுவனைப்பற்றிய பல விவரங்களை மேலும் சரியாகக் கொடுத்தார்.

மறு நாள் க்ராய்சே கூறியபடி தேடியபோது அவர் கூறிய விவரங்கள் மிகச் சரியாக இருந்தது தெரிய வந்தது.

தற்போது, Dr. டென் ஹாய்ஃப் என்ற யுட்ரெக்ட் பல்கலைக் கழக புலன் கடந்த உளவியல் பேராசிரியர் க்ராய்சேவின் இத்தகைய மாண்தக்காட்சி (clairvoyance) சக்திகளை ஆய்ந்து கொண்டிருக்கிருர்.

க்ராய்சேயின் இந்த சக்திகள், மனம் மூளையிலிருந்து வேறுபட்டது; அது சில சமயங்களில் கால-வெளி தொடர்விலிருந்து விடுபட்டு சுயமாக இயங்கக்கூடிய தன்மை உடையது என்பதைக் குறிக்கிறது என்கிருர் பேராசிரியர் டென்-ஹாய்ஃப்.

—ரமேஷ்

*சிறுகதை :*

## பாடம் பாடம் பாடம் பாடம் பாடம்

மனிதர்கள் அகவும் அந்த மசூதியின் தளத்தில் வசிக்கும் புருக்கள் கூட்டமாகக் கூடின. அவைகளின் முகங்களில் தீவிரமாக எதையோ சிந்திப்பது தெரிந்தது. ஒரு சின்னப்புரு சிறகுகளைத் தட்டி,

''நாம் ஏன் இன்று கூடியுள்ளோம்'' என்று கூட்டத்தில் இருந்த எல்லாவற்றிலும் முதிய புருவைப் பார்த்துக் கேட்டது.

''ஒன்றுமில்லை... மனிதர்களிடமிருந்து நாம் ஏதாவது கற்றுக்கொள்ள முடியுமா என்று பரிசீலிக்கத்தான்''-- முதிய புரு கூறியது.

எல்லாப் புருக்களும் தங்களுக்குள் ஒரு சுற்று விவாதித்தன. திடீரென்று ஒரு பெண்புரு எம்பிப் பறந்து,

''நல்லது... மனிதர்கள் சுத்தமாக இருக்கிருர்கள்...''

அந்தச் சின்னப்புரு அமைதியாக... ''குதிக்காதே... நாமும் சுத்தமாகவே இருக்கிருேம்.'' முதிய புரு அதை ஆமோதித்துவிட்டு,

''ஆனல் பையா, அவர்களோ பிரார்த்திக்கிருர்கள்... நாம் செய்வதில்லையே?'' என்று பெருமையாகக் கூறியது.

குட்டிப்புரு சிறிது யோசித்துவிட்டு

''ஆனல் தாத்தா, பிரார்த்தனை சுலநலத்திற்காகச் செய்யப்படுகிறதே?'' என்று கண்களில் ஒளிபூக்கக் கூறியது. முதிய புரு ஆழமாக அதைப் பார்த்துவிட்டு, ''அவர்களிடமிருந்து நாகரிகத்தைக் கற்றுக்கொள்ளலாமா?''

குட்டிப்புரு வியப்புடன் தலையைத் தூக்கி ''விளக்கமாகக் கூறுங்கள் ஐயா!'' என்று பணிவாகக் கேட்டது.

''நாகரிகம் என்ருல் உடுத்துவது...உறைவிடம் கட்டிக்கொள்வது தனித் தனியாக சொத்துக்கள் சேர்ப்பது...'' குட்டிப்புரு அவசரமாக இடை மறித்து ''அப்படியே திருடுவது...பொய் சொல்வது,... தனது படைப்பைத் தானே அழிப்பது..,இன்னும் கொலை செய்வது...இந்த நாகரிகத்தையுமா?''

கிழட்டுப்புரு தலை குனிந்தது. எல்லாப் புருக்களும் சிறகு விரித்தன. அதிகாலையில் நேற்றைய மனிதர்கள் மசூதியில் அகவுகிருர்கள். அந்தச் சின்னப்புரு கோபுரத்தில் ஏறி அவர்களைப் பார்த்து இரக்கத்துடன் கூறியது:

''மனிதர்களே! தாளைய மனிதனுக்காக நான் காத்திருக்கிறேன்!''

—நானக்.

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

நுகர்வோர் குரல்:

## "நுகர்வோர், அரசைக் கைப்பற்றுவர்"



**—நிபுணர் கருத்து**

ஒவ்வொரு நபரும் நுகர்வோரே. ஆனால் நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர மக்களே எந்த விலை ஏற்றத்தினாலும் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

அமெரிக்காவைப்போல நுகர்வோரின் மேலாண்மை (Consumer supremacy) இந்தியாவில் இருக்கவே கூடாது என்பது அறிஞர் கருத்து. காரணம் இந்தியா ஒரு முழு முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த நாடல்ல.

ஆனால் விலை ஏற்றத்தைக் குறைக்க முடியாது, நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போனால், பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பான்மை நுகர்வோர், என்பதால் இந்தியாவின் தற்போதைய அமைப்பு பாதிக்கப்படும்.

**காலப்போக்கில், நுகர்வோர் அரசியலைக் கைப்பற்றுவார்கள்** என்பதை இந்திய அரசியல் நிபுணர்கள் உணர்ந்திருப்பதைப்போல அரசு உணரவில்லை. இதனால் இரண்டில் ஒரு மாறுதல் ஏற்படும்.

ஒன்று தனியார் நிறுவனங்கள் தூக்கி எறியப்பட்டு முழுவதும் பொதுத்துறை அமைப்புகள் தோன்றும்; அல்லது பொதுத்துறை அமைப்புகள், தனியார் துறைகளால் விழுங்கப்படும்.

இந்த மாற்றம் ஏற்படக்காரணம் ஒன்று அரசாங்கம் சரியான முறையில் திட்டங்களைச் செயல்படுத்தாமை; இரண்டாவது, பல தனியார் நிறுவனங்களுக்கு அரசு அளிக்கும் அதிகப்படி சலுகைகள்.

—ஜவரன்

## "காந்தி" படத்தில் இந்தியர்கள் படும்பாடு

**இந்தியர்களைத் தங்கள் அடிமைகளாக நினைக்கும் சில வெள்ளையர்களின் மனப்பான்மை இன்னும் மாறவில்லை. இந்திய – பிரிட்டன் கூட்டுத் தயாரிப்பான 'காந்தி படத்தில் பணிபுரியும் 60 இந்தியர்களை ஆங்கிலேயர்கள் நாயினும் துச்சமாக மதிக்கிறார்களாம். காட்சி இட மேலாளர் "ஜெர்ரி லெவி" இந்தியர்களை "bloody Indians" என்று துரைத்தனத்தின் மேலேயிருந்து ஏசியிருக்கிறார். டெல்லி ஜாகீர் ஹுசைன் கல்லூரியில் "ஜாலியின் வாலாபாக்" காட்சி படப்பிடிப்பின்போது கால்ட் டேவிட் என்ற வெள்ளை டெக்னீஷியன், இந்திய டெக்னீஷியன் அருண்பாட்டிலை கை ஓங்கி அடித்திருக்கிறார்.**

**காந்தியின் கடைசி மகனாக ஃபய்யஸ் மூல்கோன்கர் என்ற குழந்தை நடிக்கிறது. இடைவேளையில் அவனது தாய் சாப்பிடக் கொணர்ந்த உணவை உண்ணும்போது ஆங்கில மேலாளர் லெவியின் மிரட்டலால் பயந்து மீதியைத் தின்னாமல் மிரண்டுபோய் விழித்தான்.**

**இந்திய யூனிட்டில் உள்ளவர்களுக்கு வார அலவன்ஸ் அதிகபட்சமாக ரூ 1400– ஆங்கிலேயருக்கு ரூ 2550– பம்பாயில் அவர்கள் தங்க ஆடம்பரமான "சீராக்" ஓட்டலில் தனித்தனி அறைகள். நம்மவர்க்கு மிகச்சாதாரண ஓட்டல்கள். அதுவும் அறையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்**

**இந்திய உதவி டைரக்டர்களான உதய்சங்கர் பானி, கோவிந் நிஹாலினி போன்றோர் சொந்தமாக எதுவும் படைக்க முடியா நிலை. வெள்ளையர் இட்ட கட்டளையை நிறைவேற்றும் ஜால்ரா உதவி டைரக்டர்கள்தான்.**

**தமக்கு முறையாக வசதி செய்யாததால் விளம்பரப் பிரிவு அதிகாரி திருமதி டாலிதாக்கூர் மனமுடைந்து ராஜினாமா செய்து விட்டார். இந்தியா வந்து, காந்தியைப் பற்றிப் படமெடுக்கும்போது இந்தியர்களுக்கு இவ்வளவு அவமதிப்பா? இயக்குநர்கள் ரிச்சர்ட் அட்டன்பரோவும், ராணி தூபேயும் கண்டும் காணாமல் இருக்கிறார்கள். —கிஷன்.**

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

கல்யாணங்கள்
மற்றும்
விசேஷங்களுக்கு

"கௌதம் பிரகாஷ்"

15, தார்சி அருணாசல முதலி தெரு,

(ரொட்டிக்காரன் தெரு-அப்பு முதலி தெரு பின்பக்கம்)

மயிலாப்பூர் — சென்னை - 600 004

விசாரிக்க:

ஜவந்த்மல் ஷோர்டியா
மெமோரியல் டிரஸ்ட்
54, பஜார் ரோடு, சென்னை – 600 004
தொலைபேசி - 72431


## உச்ச நீதிமன்றத்தின் புதிய பார்வை

"அடுத்த வீட்டுக்காரரைப் போலீசார் முறையில்லாமல் இழுத்துச் சென்றபோது நான் கண்டுகொள்ளவில்லை. எதிர் வீட்டுக்காரரையும் அப்படிச் செய்யும்போது நான் எதுவும் செய்துவிடவில்லை. அதே நடவடிக்கையை என் மீதும் போலீசார் கையாளும்போது கேட்க நாதியில்லை."

—இக்கருத்தைச் சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பின் ஆரம்பமாக எழுதி, மக்களின் விழிப்புணர்வில் மந்தம் இருந்தால் நிலைமை இப்படித்தான் ஆகுமென எச்சரிக்கிறது.

பகல்பூரில் போலீசார் கைதிகளைக் குருடாக்கிய வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது. நமது அரசியல் சட்டத்தின் 21வது பிரிவின்படி, 'எந்த நபரது வாழ்வு உரிமையும், சுதந்திரமும் முறையான சட்டத்தின் மூலம் அல்லாமல் பறிக்கப்பட முடியாது,' இந்த அடிப்படையில் தலைமை நீதிமன்றம் பகல்பூர் சம்பவத்தை விசாரிக்கிறது. 'மனித சுதந்திரம் மகத்தானது. அது வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மட்டும் இருந்துவிடக்கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நஷ்டஈடு கொடுத்தாக வேண்டும்' என்ற புதிய பார்வையை வெளிப்படுத்தியுள்ளது.

அதே போல் திருப்பத்தூர் 'இரட்டைக் கொலை' வழக்கிற்கு செஷன்ஸ் மற்றும் உயர்நீதி மன்றங்கள் கொடுத்த மரண தண்டனையை ரத்து செய்துவிட்டு 'இதுபோன்ற விஷயங்களில் வெறும் கோர்ட் சடங்குகளைவிட்டுப் பரந்த சமூக அடிப்படையில் தீர்ப்பு வழங்க வேண்டும்' என்று உயர்நீதி மன்றங்களை சுப்ரீம் கோர்ட் கண்டித்துள்ளது; இனிமேலாவது நீதிமன்றங்களும் காவல்துறையும் குற்றங்களை ஒரு சமூகப் பிரச்சினையாக ஏற்று அணுக வேண்டும்.

—மாநுடன்.

*உயிர்காக்கும் மருந்துகளில்*

## ஆந்திரம் காட்டும் அலட்சியம்

இந்தியாவில் மருந்து உற்பத்தி செய்யும் பணியில் நான்காவது இடத்தைப் பெற்றிருக்கும் ஆந்திரப்பிரதேச மருந்து உற்பத்திப் பிரிவு ஸ்தம்பித்து நிற்கிறது. ஐயாயிரம் தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட இருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பது அரிதாகும் ஒரு சூழ்நிலை. உயிர்காக்கும் மருந்துகளை உற்பத்தி செய்ய பெரிதும் உதவும் "ஆல்கஹால்" ஒதுக்கீட்டில் அரசு கடைப்பிடிக்கும் முறையற்ற செயலே இதற்குக் காரணம்.

ஆந்திரத்தில் உற்பத்தியாகும் மொத்த ஆல்கஹாலில் மருந்துகளை உற்பத்தி செய்யும் (தயாரிப்பாளருக்கு) கம்பெனிக்கு ஒதுக்கீடு சதவீதம் "இரண்டே இரண்டு தான்". சாராயம் தயாரிக்கும் கம்பெனிக்கு 85 சதவிகிதம் ஒதுக்கும் அரசின் போக்கை நினைத்தால் கோபம் பொங்குகிறது. முன்பு உற்பத்தி குறைவாக இருந்தபோதிலும் சாராய உற்பத்தியாளருக்கு ஒதுக்கீடு சதவிகிதத்தை அரசு குறைக்கவில்லை. அண்மையில் ஒரே வழியாக மிகவும் அத்தியாவசியமான உயிர்காக்கும் மருந்துகளின் உற்பத்திக்கு ஆல்கஹால் ஒதுக்க முன்வந்துள்ளதாம்.

இதில் வேதனைக்குரிய வேடிக்கை என்னவென்றால் மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட நிபுணர்களையோ, மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் உள்ள நிபுணர்களையோ கலக்காமல் உயிர்காக்கும் மருந்துகள் என்னென்ன என்பதை அரசாங்கமே நிர்ணயம் செய்யுமாம்.

இது இப்படியே நீடித்தால் இனி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நோயாளி ஆண்டவனை மட்டும் வேண்டிக் கொண்டால் போதாது. ஆள்பவர்களையும் சேர்த்து வேண்ட வேண்டும்!

—பாஸ்கரன்

## அட்டைப் படத்திற்குக் கண்டனம்!
## ஊனமற்றவர்களின் ஆவேசம்!

அநியாயங்கள் நடைபெறுகையில்
எங்கள் கண்கள் அவற்றைக் காண்பதில்லை
வன்முறைகள் பற்றிச் செவியுற்றால்
எங்கள் காதுகள் தானாக மூடிக்கொள்ளும்
ஏற்பதற்கன்றி எங்கள் கரங்கள்
என்றுமே நீள்வதில்லை
அவதூறும் அரசியலும் பேசும்
எங்கள் வாய்கள் என்றுமே
ஓய்வதில்லை
எங்களைக் காப்பாற்றிக் கொள்வதில்
எங்கள் கால்கள் காற்றையும் மிஞ்சுவன
நாங்கள் ஊனமுற்றவர்கள்
அல்ல அல்ல
ஊனமற்றவர்கள்!

—சரவணபவன்

**உங்கள் எதிர்காலப் பலன் அறிய :-**

உங்கள் ஜோதிடப் பலன்களைத் தெரிந்துகொள்ள, திருமணப் பொருத்தம் பார்க்க, வாழ்க்கைப் பிரச்சனைகளில் தெளிவடைய,

ஜோதிடர் எம். பி. சுவாமி
பிளாட் எண் 1084, 40வது தெரு
கொரட்டூர், சென்னை-600 080.

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

## Statement about ownership and other particulars about "SUTTY"

**Form IV (see rule 8)**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of publication | : | 8, Gajapathy St, Madras-30 |
| 2. | Periodcity of its publication | : | Monthly |
| 3. | Printers Name | : | J. S. GIDRAJ SHA |
| | Nationality | : | Indian |
| | Address | : | 35, Lubbai St, Madras-2 |
| 4. | Publisher's Name | : | K. N. Kamala |
| | Nationality | : | Indian |
| | Address | : | 8, Gajapathy St, Madras-30 |
| 5. | Editor's Name | : | NIRMALA SUNDAR |
| | Nationality | : | Indian |
| | Address | : | 8, Gajapathy St, Madras-30 |
| 6. | Names & Addresses of Individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total Capital | : | K. N. KAMALA<br>8, Gajapathy St., Madras-30 |

**I, K.N. Kamala, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

Dated : 2-4-81

(Sd) **K. N. Kamala**
Signature of Publisher

## அரசு ஆதரவு பெற்ற ஆபாச இதழ்கள்

கொஞ்ச நாட்களுக்கு முன்பு தமிழ் நாளிதழ்களில் "ஆபாச புத்தகங்கள் பறிமுதல்" என்பன போன்ற செய்திகள் வந்தவண்ணமிருந்தன அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்பு அவர்கள் பணிந்து போனவர்களாக காணப்படாமல் எப்போதும் போல் பலவிதமான ஆபாச புத்தகங்களையும், படங்களையும் சாலையோரத்தில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

மக்களே விரும்புகிறார்கள் என்ற போலி வாதத்தை முன்வைத்து வியாபாரம் செய்யும் கழிசடைகளைக் காவல் துறையினர் கட்டாயம் கண்டிக்க வேண்டும்.

ஆனால் பெரிய வேடிக்கை, அரசின் ஆசீர்வாதத்துடன் சில முக்கியமான ஆளுங்கட்சி பிரமுகர்களே மூக்குத்தி, மாயா போன்ற ஆபாசப் பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். யாரைப்பற்றியும், கூசாமல் பொய் எழுதுவதுடன் மூன்றாந்தரமான மஞ்சள் பத்திரிகையைவிட சாக்கடைத்தனமாக, மிகப்பச்சையான புகைப்படங்களுடன், ஓவியங்களுடன் வெளிவருகின்றன. இதே பத்திரிகையை ஆளும் கட்சி அல்லாத வேறொருவர் நடத்தினால் காவல் துறையினரோ, அரசோ சும்மா விட்டிருப்பார்களா? அரசு இவர்களை இன்னும் வேடிக்கை பார்க்கவேண்டிய அவசியமென்ன? அண்ணாவின் கொள்கையில் எந்த இடத்தில் இந்தப் பத்திரிகை தர்மம் அமர்கிறது என்பது புரியவில்லை. பின் ஏன் அண்ணாவின் அரசு, தனது முன்னணி வீரர்கள் அசிங்கத்தை வைத்து எழுத்து வியாபாரம் செய்வதை அனுமதித்துக்கொண்டிருக்கிறது?

இளம் உள்ளங்களை மாசுபடுத்தும் இதுபோன்ற நச்சுக்களை அரசு களையாவிட்டால் இளைய தலைமுறை மோசமாகத் திசை திருப்பப்படும்.

—*சுவிசா சிசுபரன்*

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

With Best Compliments From :

**GODAVARI PLYWOODS LTD**

**SYDENHAMS ROAD, MADRAS-600 007**

Manufacturers of :

**ALL VARIETIES OF PLYWOOD**

Specialists in : SHUTTERING PLYWOOD
&
FLUSH DOORS

## தமிழகப் பல்கலைக் கழகங்களின் பண்பு நலன்கள்

ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் கல்வியறிவும் தரமும் பிற்பட்டவை என்று கூறிக்கொள்வதில் தமிழர்களுக்கு அதீத பெருமையுண்டு. ஆனால் யதார்த்தமாகப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள் பின்தங்கியவை மட்டுமல்ல, பிற்போக்கானவையும்கூட.

காலனி ஆட்சியில் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குள் பதுங்கிக்கொண்டிருக்கும் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் நடைமுறை இன்றைய நடைமுறைக்கு அந்நியமானதாகும். ஆட்சிக்குழுவில் (**senate**) மாணவர், ஆசிரியர், பொதுமக்கள் பிரதிநிதித்துவம் கிடையாது. அண்மையில் உருவாக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக் குழுவே கிடையாது.

அரசு, பல்கலைக்கழகங்களின் சுயேட்சையில் தலையிடாது என்ற 'கேடயம்' வேறு; இந்தப் பாதுகாப்பை வைத்துக் கொண்டு, கல்விக்கண்ணை ஒளிபெறச் செய்து அறிவின் எல்லையை விரிவாக்கும் பணியில் ஈடுபட வேண்டிய பல்கலைக் கழகங்கள் ஊழலின் ஊற்றுக் கண்களாக உள்ளன.

அதிகார வேட்கை, சாதி, ஊழல் இவையே நமது பல்கலைக் கழகங்களின் 'பண்பு நலன்கள்'. குறைகளைக் களைய அமைப் பொன்று இல்லாததால் போராட்டங்கள் வெடித்து சிதறுகின்றன.

இந்த அழகில் பொன்விழாக் கண்டப் பல்கலைக் கழகமொன்றில் பாரம்பரிய இணைவேந்தர் (**pro-chancellor**) பதவியொன்று பரிமளிக்கிறது.

—**ரகுநாதன்**
(AUT முன்னாள் செயலர்)

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

With Best Compliments From :

**GODAVARI PLYWOODS LTD**

**SYDENHAMS ROAD, MADRAS-600 007**

**Manufacturers of :**

**ALL VARIETIES OF PLYWOOD**

Specialists in : SHUTTERING PLYWOOD
&
FLUSH DOORS

## தமிழகப் பல்கலைக் கழகங்களின் பண்பு நலன்கள்

ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் கல்வியறிவும் தரமும் பிற்பட்டவை என்று கூறிக்கொள்வதில் தமிழர்களுக்கு அதீத பெருமையுண்டு. ஆனால் யதார்த்தமாகப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்கள் பின்தங்கியவை மட்டுமல்ல, பிற்போக்கானவையும்கூட.

காலனி ஆட்சியில் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குள் பதுங்கிக்கொண்டிருக்கும் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் நடைமுறை இன்றைய நடைமுறைக்கு அந்நியமானதாகும். ஆட்சிக்குழுவில் (**senate**) மாணவர், ஆசிரியர், பொதுமக்கள் பிரதிநிதித்துவம் கிடையாது. அண்மையில் உருவாக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக் குழுவே கிடையாது.

அரசு, பல்கலைக்கழகங்களின் சுயேட்சையில் தலையிடாது என்ற 'கேடயம்' வேறு; இந்தப் பாதுகாப்பை வைத்துக் கொண்டு, கல்விக்கண்ணை ஒளிபெறச் செய்து அறிவின் எல்லையை விரிவாக்கும் பணியில் ஈடுபட வேண்டய பல்கலைக் கழகங்கள் ஊழலின் ஊற்றுக் கண்களாக உள்ளன.

அதிகார வேட்கை, சாதி, ஊழல் இவையே நமது பல்கலைக் கழகங்களின் 'பண்பு நலன்கள்'. குறைகளைக் களைய அமைப்பொன்று இல்லாததால் போராட்டங்கள் வெடித்து சிதறுகின்றன.

இந்த அழகில் பொன்விழாக் கண்டப் பல்கலைக் கழகமொன்றில் பாரம்பரிய இணைவேந்தர் (**pro-chancellor**) பதவியொன்று பரிமளிக்கிறது.

**—ரகுநாதன்**
(AUT முன்னாள் செயலர்)

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

## வாசகர்களிடம் கொஞ்சம் தனியாக...

**இந்த இதழின் சிறப்புக்குத் துணை நின்றவர்கள் :—**

**மாணவர்கள் :** சுவிசா சிசுபரன், ஆர். இராமகிருஷ்ணன், பாலாஜி, சுதீந்தரன், குருமூர்த்தி, அருள்மணி.

இன்னும் பின்னணியில் பேருதவி புரிந்த விளம்பரம் விரும்பா ஆசிரியர்கள், கலைஞர்கள், புதியவர்கள்.

**அட்டை உள் ஓவியங்கள் :** எம். ஷேக் அப்துல் காதர், பம்மல்.


* *இவ்விதழ் பற்றிய விமர்சனங்கள், சுட்டியின் அமைப்பிற்கேற்ற படைப்புகள், ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.*
* *மாமூல், பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளுக்குச் சுட்டியில் இடமில்லை.*
* *புதிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், பாரபட்சமின்றி, சிபாரிசின்றி கவனிக்கப்படுவார்கள்.*
* *ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி சுட்டி வெளிவரும்.*
* *12 இதழ்கள், அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 3-00 பணவிடை செய்யலாம்.*
* *முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தமிழகமெங்கும் தேவை.*
* *எல்லாத் தொடர்புகளுக்கும்—*

**ஆசிரியர்,**
**சுட்டி**
8, கஜபதி தெரு, சென்னை—600 030.



FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010

IDEAL FOR COLLEGE STUDENTS



## ATLASOLEX MOPED

CHEAPEST AND THE BEST MOPED ON THE ROAD

**Price : Rs. 2600 NETT**

- ☐ Fuel Consumption : Approx 75 km/per Litre
- ☐ Maximum H P. : 0.8 H P
- ☐ The Moped is of FRENCH ORIGIN
- ☐ IMPORTANT PARTS MADE IN FRANCE
- ☐ Front wheel mounted engine for greater milage
- ☐ ATTRACTIVELY designed in Beautiful Colours

Pay Rs. 800 only and balance by instalment.

Authorised Dealers :

TOOLS & TOOLS
7, State Bank Street,
Mount Road, Madras-600 002 Phone : 81

FREE E Books - www.thamizham.net - TM 1854 / Nov 2010